நடத்துனர் : அண்மையில் ஸ்ரீலங்காவில் உயிர்த்தெழுந்த திருநாள் வழிபாட்டின் போது, பயங்கரமான தீவிரவாத தாக்குதலில் தமக்கு நெருக்கமானவர்களை இழந்தவர்களுக்காய் ஜெபிக்கிறோம். அவர்கள் உள்ளங்களை ஆற்றி, இவ்விதமான வன்முறை செயல்களில் ஈடுபடுகின்றவர்கள் மேல் உம் வெளிச்சத்தை வீசும்.

சபையார் : எங்கள் ஜெபத்தைக் கேளும் ஆண்டவரே.

நடத்துனர் : வலியினால் பாதிக்கப்படுகின்ற நோயாளிகள், துன்புறுகின்றவர்கள், மனஅழுத்தத்திற்குள்ளானவர்கள், தனிமையானவர்கள், அன்புக்காக ஏங்குகின்றவர்கள், வேலையிழந்தவர்கள், இவர்களுக்காக ஜெபிக்கின்றோம். உமது பரிவை அவர்களுக்கு பாராட்டும்.

சபையார் : இரக்கமுள்ள கர்த்தரே, எங்கள் விண்ணப்பத்தைக் கேட்டருளும்.

கர்த்தரின் ஜெபம் :

பரமண்டலத்தில் உள்ள எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக. உம்முடைய இராஜியம் வருவதாக. உம்முடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவது போல பூலோகத்திலும் செய்யப்படுவதாக. அன்றன்றுள்ள ஆகாரத்தை எங்களுக்கு தாரும். நாங்கள் எங்கள் கடனாளிகளுக்கு மன்னிக்கிறது போல எங்கள் பாவக்குற்றங்களை மன்னியும். எங்களை சோதனைக்குட்பட பண்ணாமல் தீமையினின்று எங்களை இரட்சித்தருளும். இராஜியமும், வல்லமையும் மகிமையும் உம்முடையவைகளே, ஆமேன்.

சபை அறிவிப்புகள் :

பெண்கள் ஐக்கிய சங்கத்தின் ஆண்டறிக்கை :

காணிக்கை பாமாலை :

காணிக்கை அர்ப்பணிப்பு ஜெபம் :

முடிவு பாமாலை :

முடிவு ஜெபம் :

இறைஆசி :

நாம் அனைவரும், நமது ஆண்டவர், இயேசு கிறிஸ்துவின் தந்தையாகிய கடவுளை, ஒரே குரலோடு மகிமைபடுத்த, இயேசு கிறிஸ்துவோடு ஐக்கியப்பட்டு, மற்றோரோடு நல்லிணக்கமாக வாழ, பொறுமை நிறைந்த, உற்சாகம் அளிக்கிற கடவுள் நம்மை ஆசீர்வதிப்பாராக. ஆமேன்.

தென்னிந்திய திருச்சபை
கர்நாடக மத்திய பேராயம்
பெண்கள் ஐக்கிய சங்கம்



பெண்கள் ஞாயிறு 2019

வழிபாட்டு முறைமை

கருப்பொருள்:

பெண்கள் சமாதான வலைப்பின்னலின் பாலங்கள்

வழிப்பாட்டிற்கு அழைப்பு :

நடத்துனர்: கடவுள் நம்மை அக்கறையுள்ள, வழிப்படுகிற சமூகமாய் இங்கு கூட்டி சேர்த்திருக்கிறார்.

சபையார்: துதியோடும், அன்போடும், நன்றியோடும் அவரை துதிப்போம்.

நடத்துனர்: கடவுளின் பிள்ளைகள் அனைவரும் தங்களை ஆளும் இராஜாவில் களிக்கூறட்டும்

சபையார்: கர்த்தரில் களிக்கூருகிறோம். அவர் பரிசுத்த நாமத்தை மகிமைப்படுத்துவோம்.

நடத்துனர்: பூமியின் கடையாந்திரங்கள் கர்த்தரை நினைவு கூர்ந்து அவரிடம் திரும்பும்.

சபையார்: பூமியின் அனைத்து குடும்பங்களும் ஆண்டவரை தொழுதுக் கொள்ளும். ஏனெனில் பூமியின் ஜனங்களை ஆண்டு அவர்களை போஷிக்கிற ஆண்டவருக்கு ஆளுகை உரியது.

நடத்துனர் : நமது கிறிஸ்தவ பாரம்பரியத்திற்காய் கடவுளைத் துதித்து வழிப்படுவோம்.

சபையார் : நமக்கு உயிர் மூச்சை வழங்குகிற கடவுளை போற்றுவதற்காய் ஒன்றாய் இணைந்திருக்கிறோம்.

துதியும், வாழ்த்தும் :

அழியாமை உள்ளவரே, ஆணும், பெண்ணும் கலந்த உம் படைப்பைச் சரிசமமாக நடத்துவதற்காக உம்மைத் துதிக்கிறோம். மற்றோரின் வேற்றுமைகளை மதித்து, அவர்களுக்கு செவிசாய்க்க எங்களுக்கு கற்பித்திருக்கிறீர். நீர் ஆண் பெண் வித்தியாசம் இல்லாமல், இருவருக்கும் சுகமளித்து, அற்புதங்களை செய்து, போதித்து, எங்களுக்கு சிறந்த மாதிரியைக் காண்பித்தீர். நீர் உம் படைப்பை நேசிக்கிறீர். உம் வழிகளில் நடந்து, பயமில்லாத ஓர் உலகை உருவாக்க முயல்கிற உம் பிள்ளைகளை இன்றும் தேடுகிறீர்.

சபையார் : அழியாமை உள்ள கடவுளே, உம்மைத் துதிக்கிறோம்.

நடத்துனர் : சிருஷ்டி கர்த்தனே, உம் சாயலில் படைக்கப்பட்டு இயேசு கிறிஸ்துவில் சீடத்துவத்திற்கு அழைக்கப்பட்டு தூய ஆவியால் ஆற்றல் படுத்தப்பட்ட, இந்த ஆசீர்வாதமுள்ள பெண்கள் கூட்டத்திற்காக உம்மைத் துதிக்கிறோம். நீர் எங்கள் விசுவாசத்தை பெலப்படுத்தி, வரங்களை உறுதிப்படுத்துகிறீர். நாங்கள் ஆன்மீக ரீதியாக உம்மையே சார்ந்திருக்கவும், திருப்பணியிலும், செயல்பாட்டிலும் பங்கு பெற நீர் எங்களை அழைத்திருக்கிறீர்.

வேதப்பாடங்கள் :

முதல் வேதப்பாடம் : 2 சாமுவேல் 14:1-10

குறுநாடகம் , சிறப்புப்பாடல் : பெண்கள் ஐக்கிய சங்கம்.

இரண்டாம் வேதப்பாடம்: எபேசியர் 4:1-3

பாமாலை

மூன்றாம் வேதப்பாடம்: யோவான் 4:27-30, 39-42.

அருளுரை

விசுவாச பிரமாணம் :

உலகத்தின் விடுதலை நாயகனாய் இருக்கின்ற இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கின்றோம். அவர் பெண்களை அமைதிப்படுத்துகின்ற கலாச்சாரத்தை உடைத்து, சமுதாயத்தில் பெண்களுக்கான அந்தஸ்தை உறுதிப்படுத்தினார். ஒரு மனித சமுதாயத்தைக் கட்டுவதற்காக, அனைத்து ஒடுக்குகின்ற, சுரண்டுகின்ற அமைப்புகளை எதிர்த்து, அவருடைய மாதிரியைப் பின்பற்ற அவர் நம்மை அழைத்திருக்கிறார்.

நாம் உறுதியாய் நிற்பதற்காக, நம்மை ஆற்றல் படுத்துகின்ற, தூய ஆவியை விசுவாசிக்கிறோம். இவர் அனைத்து மக்களும் முழுமையான வாழ்வைப் பெற உதவும்படி, படைப்பின் ஒருங்கிணைவைப் புதுப்பித்து, மீள செய்கிறார். ஆமேன்.

இடையீட்டு மன்றாட்டு :

நடத்துனர் : இப்பிரபஞ்சத்தின் கர்த்தனே, மனுக்குலத்தின் படைப்பாளரே, பிறரை நேசித்து உம் அழகான படைப்பைப் பாதுகாத்து, சுற்றுசூழலை மதிக்கின்ற தன்மை எங்களுக்குள் தொடரும்படி செய்யும்.

சபையார் : எங்கள் ஜெபத்தைக் கேளும் ஆண்டவரே.

நடத்துனர் : அனைத்து மக்களும் அமைதியான சூழலில் வாழ்ந்து, தாங்கள் படைக்கப்பட்ட நோக்கத்தை நிறைவேற்ற அனைத்து நாடுகளுக்கிடையே சமாதானத்திற்காய் ஜெபிக்கிறோம்.

சபையார் : எங்கள் ஜெபத்தைக் கேளும் ஆண்டவரே.

சபையார் : ஆண்டவரே உமக்கு நன்றி செலுத்துகிறோம்.

நடத்துனர் : நெருக்கடியினால் பாதிக்கப்பட்டவர்கள், மற்றவர்களுக்கு ஒரு எடுத்துகாட்டாய் இருக்கவும், அனைத்து பெண்களும், வளர்கின்ற பெண்பிள்ளைகளும், நேர்மறையான எதிர்காலத்தை உருவாக்க உதவவும், அமைதி என்பது நமக்குள் இருந்துதான் தொடங்குகின்றது என்ற உண்மையைப் புரிய வைத்த, நைஜீரியாவைச் சார்ந்த பாத்திமா போன்றவர்களுக்காக நன்றி செலுத்துகிறோம்.

சபையார் : ஆண்டவரே உமக்கு நன்றி செலுத்துகிறோம்.

நடத்துனர் : மேற்கு ஆப்பிரிக்காவில் உள்ள மாலியை சேர்ந்தச் மசாரன், சுரங்க தொழிற்சாலைகளுக்கும், உள்நாட்டு சமுதாயத்தினருக்கும், அதிகாரிகளுக்கும், இடையே நல்ல உறவை ஏற்படுத்த அயராது உழைக்கிறார். தொழில் மற்றும் மனித உரிமைகளைக் குறித்து ஐக்கிய நாடுகளின் கொள்கைகளை அடிப்படையாக கொண்டு, அங்குள்ள பெண்களுக்கு பயிற்சி அளித்து, அந்நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துகின்ற முயற்சிகளில் அவர்கள் பங்கேற்க உற்சாகப்படுத்துகின்றார்.

சபையார் : ஆண்டவரே உமக்கு நன்றி செலுத்துகிறோம்.

நடத்துனர் : எங்களுடைய அன்னை தெரசாவை நினைவு கூர்ந்து உமக்கு நன்றி செலுத்துகிறோம். அவர் பிற இனம், மதம், நாட்டைச் சார்ந்தவர்களுக்கு தன்னலமின்றி உழைத்தார். இவ்விதமாக அனைத்து தடைகளையும் தாண்டினார். அவருடைய செய்தியின் வழியாக மனிதனுக்குள்ளாக இருக்கின்ற, தன்மையை பாதித்தார். மனித மாண்பை காப்பதின் வழியாக சமாதானத்தை மிக அடிப்படையான வழியில் ஊக்குவித்தார்.

சபையார் : எங்கள் முன் சென்று, மோதல்களைத் தீர்ப்பதற்காகவும், சமாதானத்தை ஏற்படுத்தவும், கடினமான பாதையில் நடந்த அனைவருக்காக உம்மைத் துதிக்கிறோம். சமாதானத்தை உருவாக்குகின்ற கருவிகளாக எங்களை ஆயத்தப்படுத்தி, சமாதானம் மற்றும் வளர்ச்சி நிலைத்திருக்கும்படி செய்ய, இன்னும் பெண்தலைவிகளை எங்களுக்கு தந்தருளும். திருமறையில் சமாதானத்திற்கான பாலங்களைக் கட்டுவதில், முன்மாதிரிகளாக இருந்த பெண்களுக்காக நன்றி செலுத்துகிறோம்.

சபையார்: படைப்பாளரே, உம் திருப்பெயரை மகிமைப்படுத்துகிறோம்.

நடத்துனர் : எல்லாம் வல்லவரே, ஊழியத்திற்காகவும், தலைமைத்துவத்திற்காகவும், சமாதானம், பரிவு, விடாமுயற்சி, ஐக்கியம், அன்பு என்னும் வரங்களுக்காக எங்களைத் தகுதிப்படுத்தி இருக்கின்ற ஆவியானவரின் அதிசயமான வரங்களைப் பெறும்படி செய்ததற்காக உம்மைத் துதிக்கிறோம்.

சபையார்: எல்லாம் வல்லவரே, உம் திருப்பெயரைத் துதிக்கிறோம்.

நடத்துனர் : அண்டசராசரத்தின் கடவுளே, எங்கள் கண்ணுக்கு புலப்படாதவரே, அனைவரும் ஒற்றுமையாய் வாழ்வதே உம்முடைய திட்டமாய் இருப்பதற்காய் உம்மைத் துதிக்கிறோம். வாழ்வளிக்கிறவரே, நாங்கள் வாழ்கிற இப்பரந்த பூமியில் இணக்கத்தை ஏற்படுத்த நாங்கள் முயற்சிக்கும் போது, நீர் இப்புவியில் எங்களுக்கு தந்த பொறுப்பை நினைவில் கொள்கிறோம்.

சபையார் : எங்கள் கண்ணுக்கு புலப்படாதவரே, உம்மைத் துதிக்கிறோம், போற்றுகிறோம்.

பாவ அறிக்கை ஜெபம்:

பாவ அறிக்கைக்கான அழைப்பு

(சில நொடி அமைதிக்கு பிறகு பின்வரும் பாமாலையை ஜெப நிலையில் பாடுவோம்.)

எந்தன் ஜீவன் இயேசுவே, சொந்தமாக ஆளுமே
எந்தன் காலம் நேரமும், நீர் கையாடியருளும்.
எந்தன் கை பேரன்பினால், ஏவப்படும் எந்தன் கால்
சேவை செய்ய விரையும், அழகாக விளங்கும்

நடத்துனர் : எல்லாம் வல்லக் கடவுளே, நாங்கள் உமக்குரியவர்கள் என்பதை பல நேரங்களில் மறந்து, எங்கள் சுமைகளைச் சுமந்து கொண்டு எங்கள் சொந்த விருப்பத்தைச் செய்ய முயன்றிருக்கிறோம் என்பதை அறிக்கை செய்கிறோம். உமது மகிமைக்கு சான்றளிக்க தவறியிருக்கிறோம். இவற்றிற்காக உமது மன்னிப்பை வேண்டுகிறோம்.

சபையார்: எங்களை மன்னியும் தனிநபரின் கடவுளே.

நடத்துனர் : பரிசுத்தரே, உம்மிடம் இருந்து மறைக்க முயற்சிக்கிற காரியங்களை உம்மிடம் அறிக்கையிட உம் சமூகம் வருகிறோம். எங்கள் பாவத்தில் இருந்து எங்களைக் குணமாக்கும். உம் கோபத்தில் எங்களை வையாதிரும். உம்மிடம் இருந்து வழி விலகி சென்றோம்.

சபையார் : எங்களை மன்னியும் பரிசுத்தமுள்ள கர்த்தரே.

நடத்துனர் : அன்புள்ளவரே, கருணையும், கிருபையும் நிறைந்தவரே, எங்கள் கடின இருதயத்தையும், சக மனிதரை மன்னிக்காத எங்கள் தன்மையையும் உம்மிடம் அறிக்கை செய்கிறோம்.

சபையார் : எங்களுடைய அன்பற்ற தன்மையை மன்னியும் தேவனே.

நடத்துனர்: இரக்கத்தில் ஐசுவரியம் உள்ளவரே, எங்கள் நன்றியற்ற தருணங்களையும், இவ்வுலகின் அதிசயங்களைப் பாராட்டாத ஆவிக்குரிய குருட்டுத்தன்மையையும் எங்களுக்கு மன்னியும்.

சபையார் : எங்களை மன்னியும் இரக்கமுள்ள தேவனே.

நடத்துனர் : மகத்துவம் உள்ளவரே, தேவையில் உள்ள எளியவருக்கு உதவாமல், சுயநலமாக வாழ்ந்து வறியவருக்கு கரிசனைக்காட்ட தவறியிருக்கிறோம். .

சபையார்: எங்களை மன்னியும் இரக்கமுள்ள தேவனே.

பாவமன்னிப்பின் உறுதி : சபை ஆயர்

அனைத்து சுகத்தையும், மன்னிப்பையும் அருளும் தேவன், வார்த்தை மனுவான தமது குமாரானும், நமது ஆண்டவருமான இயேசு கிறிஸ்துவின் மகிமையை நாம் காணும்படி, நம்மை அவரிடம் சேர்த்துக் கொண்டு, நம் பாவங்களில் இருந்து நம்மைச் சுத்திகரிப்பாராக. அவருடைய மன்னிப்பையும், சமாதானத்தையும் இன்றும் என்றும் நமக்கு வழங்குவாராக. ஆமேன்.

சுருக்க ஜெபம்:

எம் தேவனே, சமாதானத்தின் காரணரே, ஒற்றுமையின் நேசரே, உம்மை அறிகிற அறிவில் எங்கள் நித்தியவாழ்வு அடங்கியிருக்கிறது. உமது பணி பூரண விடுதலையளிக்கிறது. எங்கள் உடைக்கப்பட்ட, பிளவுப்பட்ட உலகின் மேல் இரக்கமாய் இரும். எல்லார் உள்ளத்திலும் சமாதானத்தை நிரப்பும். போர் மூட்டும் ஆவியை எங்கள் உள்ளங்களில் இருந்து அப்புறப்படுத்தும். எல்லா இனங்களும், ஜனங்களும், ஒரேக்குடும்பத்தின் உறுப்பினராய் வாழ்ந்து, உம் கற்பனைகளுக்கு கீழ்ப்படிய உதவும். எங்களை எதிர்க்கின்றவர்களின் தாக்கத்தில் இருந்து உம் எளிய ஊழியர்களான எங்களைக்

காத்துக்கொள்ளும். உம் பாதுகாப்பில் நம்பிக்கைக் கொண்டு, எதிராளியின் பலத்திற்கு அஞ்சாமல் இருக்கும்படி செய்யும். நமது ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் பலத்தினால் வேண்டுகிறோம். ஆமேன்.

நன்றி மன்றாட்டு:

நடத்துனர் : அண்டசராசரங்களைப் படைத்த ஆண்டவரே, அனுதினமும் எங்கள் வாழ்க்கையின் பாதையில் குறுக்கிடும் எண்ணில் அடங்காத ஆபத்துக்களில் இருந்து எங்களைக் காத்து வருகின்றீர். இந்த வாழ்நாட்கள் உம் கிருபையால் எங்களுக்கு கிடைத்தது.

சபையார்: பரிசாய் கிடைத்த இந்த வாழ்க்கைக்காய் உமக்கு நன்றி செலுத்துகிறோம்.

நடத்துனர் : போர்களில் கொல்லப்படுகின்றவர்களில், படைவீரர்களின் எண்ணிக்கையை விட, பெண்கள் மற்றும் குழந்தைகளின் எண்ணிக்கை அதிகமாய் உள்ளது என்பதை அறிகிறோம். ஆயினும், காலகாலமாய் சமாதானத்தை ஏற்படுத்த பெண்களே சிறந்த முறையில் துணைப்புரிந்திருக்கின்றனர்.

சபையார் : ஆண்டவரே உமக்கு நன்றி செலுத்துகிறோம்.

நடத்துனர் : ஹரியட் டப்மன் போன்ற பெண்களை நினைவு கூர்ந்து அவர்களுக்காக உமக்கு நன்றி செலுத்துகிறோம். 1820ல் பிறந்த இவர் அடிமைத்தனத்தில் இருந்து தப்பி ஓடி, 300க்கும் மேற்பட்ட அடிமைகள் விடுதலை பெற உதவினார். 1863ல் உள்நாட்டு போரின் சூழ்நிலையில் மேரிலேன்ட் பகுதியில் செவிலியராக பணிபுரிந்து, தன் இயற்கை மருந்தினால், சாகும் தருவாயில் இருந்த போர்வீரர்களை குணப்படுத்தினார்.

சபையார் : ஆண்டவரே உமக்கு நன்றி செலுத்துகிறோம்.

நடத்துனர் : பல்வேறு உலக சமாதான மாநாடுகளில், பாலஸ்தீனருக்கும், யூதருக்கும் இடையில் சமாதான பேச்சு வார்த்தையை, தைரியமாய் நடத்திய யூதப் பெண்மணி அடா அஹரோனி அவர்களுக்காய் நன்றி செலுத்துகிறோம். இவர் பாலஸ்தீனர்-யூதர் மோதலினால் பாதிக்கப்பட்டவராய் இருந்தாலும், அனைத்து மக்களையும் சமாதானத்திற்கான பாலங்களைக் கட்ட அழைக்கிறார்.